இந்திய உச்ச நீதிமன்றம்

ஜூன் 16,2022

மாண்புமிகு நீதியரசர் திரு.எ எஸ்.போபண்ணா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு.விக்ரம் நாத்

மேல்முறையீட்டு வழக்கு எண்கள். (குற்றவியல்)2405-06/2014

மேஜர் சிங் -மேல்முறையீட்டளர்

/எதிர் /

பஞ்சாப் மாநிலம் -எதிர்மேல்முறையீட்டளர்

தண்டனை சட்டத் தொகுப்பு 1860- பிரிவு 304 பகுதி ii-கொலைக்கு நிகராகும் குற்றமுறு மனிதக் கொலை மற்றும் கொலைக்கு நிகராகாத குற்றமுறு மனிதக் கொலை இவை இரண்டிற்கும் உள்ள மாறுபாடு- இவை இரண்டினுல் செய்த குற்றங்களுக்கு இடையில் உள்நோக்கம் மற்றும் அறிவு சார்ந்த ஒரு நுணுக்கமான வித்தியாசம் உள்ளது என்று தீர்ப்பு- குற்றம் சாட்டப்பட்டவர் கொலைக்கு நிகராகும் குற்றமுறு மனிதக் கொலை செய்தாரா அல்லது கொலைக்கு நிகராகாத குற்றமுறு மனிதக் கொலை செய்தாரா என்ற முடிவுக்கு வருவதற்கு உள்நோக்கம் மட்டுமே அச்சாணியாகும்- உள்நோக்கம், அறிவு மற்றும் குற்றத்தின் அளவும் எடுத்துக் கொள்ளப்படும்- அதாவது இறந்தவர் எப்படி கொல்லப்பட்டார் என்ற முடிவுக்கு வருவதற்கு இவை அனைத்தும் முக்கிய பங்கு வகிக்கின்றன- இந்த வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர்- மேல்முறையீட்டாளருக்கு அவருடைய மாமனை கொல்லும் உள்நோக்கம் கிடையாது- குற்றம் சாட்டப்பட்டவரின் செயல்களை வைத்து அவருக்கு உள்நோக்கம் இல்லை என்பதை நாம் பார்க்க முடிகிறது- குற்றம் நடந்த முந்தைய நாள் அவருடைய மாமன் அவரை திட்டியதால்

கோபமுற்றுள்ளார்- இது அவருக்கு குற்றம் செய்ய தூண்டுதலாக இருந்துள்ளது- குற்றம் சாட்டப்பட்டவர் கையில் வைத்திருந்த கட்டிலின் ஒரு கால் கட்டைத் துண்டு ஒரு அபாயகரமான கருவியாக நாம் கருதக்கூடாது- அவர் ஒரே ஒரு அடி இறந்தவரின் தலையில் அடித்ததை வைத்து அவர் தன் சொந்த மாமனை கொலை செய்யும் உள்நோக்கம் கொண்டிருந்தார் என்று கூற முடியாது- முந்தைய நாள் அவருக்கு நடந்த அவமானத்திற்கு பதிலடி கொடுக்க நினைத்துள்ளார்- மேலும் ஒரே ஒரு அடியினால் அவர் மாமன் இறந்து விடுவார் என்ற அறிவு மேல்முறையீட்டாளருக்கு இருந்தது என்று கூற முடியாது-ஆகையால், குற்றம் சாட்டப்பட்டவர் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302 ன் கீழ் தண்டனை பெறக்கூடியவர் அல்ல- ஆனால் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 304 பகுதி ii ன் கீழ் தண்டனை பெறக்கூடியவர் ஆவார்

மேற்கோள்: முகம்மது ரபீக் எதிர் உத்திரப்பிரதேச மாநில அரசு (20 21) 10 எஸ்.சி.சி 706

சட்ட வழக்கு மேற்கோள்

(20 21) 10 எஸ்.சி.சி 706 பத்தி 14

குற்றவியல் மேல்முறையீட்டு ஆட்சி எல்லை- 2014 ஆம் ஆண்டு குற்றவியல் மேல்முறையீட்டு எண்கள் 2405- 06

பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம், சண்டிகர் குற்றவியல் மேல்முறையீட்டு எண் டி- 41- டிபிஎ 2002 மற்றும் குற்றவியல் சீராய்வு 2002 ம் ஆண்டு எண் 391, 03.04.2014 இவைகளின் தீர்ப்பு மற்றும் உத்தரவுகளின் படி

மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்- ககன் குப்தா

எதிர் மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்கள் ஆர். கே.ரத்தோர் மற்றும் செல்வி ஜஸ்பிரீத் கோகியா

தீர்ப்புரை

இந்த நீதிமன்றம் கீழ்கண்ட தீர்ப்புரை வழங்கியுள்ளது .

1) குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் மேல்முறையிட்டாளர் மேஜர் சிங்(இனி மேல் முறையீட்டாளர் என்று சொல்லப்படுவார்) கொடுத்த இந்த மேல் முறையீடுகள் பஞ்சாப் மற்றும் அரியானா உயர் நீதிமன்றம் 03-04-2014 ஆம் ஆண்டு மேல்முறையீடு எண்: 421/ 2002 மற்றும் குற்றவியல் சீராய்வு வழக்கு எண்:391/2002 இவைகளில் வழங்கப்பட்ட தீர்ப்புரையிலிருந்து உருவாகிறது. இந்த மேல் கோல் வழக்குகளில் மேல்முறையீடு மற்றும் சீராய்வு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், விசாரணை நீதிமன்றத்தின் குற்றவிடுதலை தள்ளுபடி செய்யப்பட்டது, மற்றும் மேல்முறையீட்டாளருக்கு இந்திய தண்டனை சட்டம், 1860 பிரிவு 302 ன் படி ஆயுட்கால சிறை தண்டனையும் மற்றும் ரூபாய் 5000 அபராதமும் விதிக்கப்பட்டது

பொருண்மைகள்:

2)இரண்டு நாட்கள் நிகழ்வின் மூலம் அரசு தரப்பு வழக்கு உருவாகியுள்ளது. அது கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது

i) 20-07-1998 அன்று, அதாவது இந்த அசம்பாவித சம்பவம் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன் மேல்முறையீட்டாளர் தனது மாமன் மகான் சிங்(இறந்தவர்) என்பவருடன் சண்டையிட்டு தகாத வார்த்தைகளால் திட்டி உள்ளார். அவர்களுக்குள் நடந்த இந்த விவாதத்தால், மகான்சிங் மேல் முறையிட்டாளரை கண்டித்து உள்ளார்.

ii) சம்பவம் நடந்த அன்று அதாவது 21- 07-1998 அன்று காலை சுமார் 10.30 மணி /11 மணி அளவில் சுக்ராஜ் சிங்(குற்றமுறையீடு செய்பவர்) என்பவரின் தந்தை மக்கான் சிங் அவர்களுடைய கிராமத்தின் பேருந்து நிலையம் நோக்கி சென்று கொண்டிருந்தார். அவர் செல்லும் வழியில், பேருந்து நிலையத்தின் மறு பக்கத்தில் இருந்து மேஜர் சிங் கையில் 'பஹி' என்று சொல்லப்படும் (மரத்தினால் ஆன கட்டில் கால்) கருவியை கையில் பிடித்துக் கொண்டு வந்தார். அவர் முந்தைய நாள் தன்னை திட்டி அவமானப்படுத்தியதற்காக மக்கான் சிங்கிற்கு

பாடம் கற்பிக்கப் போவதாக பயமுறுத்தினார். அதன் தொடர்ச்சியாக, குற்றம் சாட்டப்பட்டவர் மக்கான் சிங் தலையில் அந்த பஹி கருவியால் ஓங்கி அடித்தார். அதன் விளைவாக, மக்கான் சிங் கீழே விழுந்து விட்டார். உடனே, மேஜர் சீங் சம்பவ இடத்திலிருந்து பஹி கருவியை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார். அதன் பிறகு, தில்பக் சிங் என்பவரின் கடைக்கு முன்னால் நின்று கொண்டிருந்த சுக்ராஜ் சிங் மற்றும் சரஞ்ஜித் சிங் தலையில் இரத்தம் வழிந்து கொண்டிருந்த தங்களுடைய தந்தை மக்கான் சிங்கை கித்தர்பாஹா அரசு(சிவில்) மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.மக்கான் சிங்கின் நிலைமை மோசமாக இருந்ததால், மருத்துவர் அவரை லூதியானாவில் உள்ள தயானந்த மருத்துவ கல்லூரிக்கு அனுப்பி வைத்தார். சம்பவம் நடந்த மறுநாள் அதாவது 22- 07-1998 அன்று மக்கான்சிங் பலத்த காயங்களின் விளைவாக மரணம் அடைந்தார்.

3. சுக்ராஜ் சிங் கித்தர்பாக ஹுஸ்னார் செளக் என்ற இடத்தில் உள்ள காவல் நிலையத்திற்கு சென்று துணை உதவி ஆய்வாளர் அர்நைல் சிங்கை சந்தித்து வாக்குமூலத்தை எழுத்து வடிவில் பதிவு செய்தார். அந்த புகாரை காவலர்கள் ஒப்புதல் அளித்த பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்காக கோத்பாய் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தனர். காவலர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து வரைபடம் தயாரித்து இரத்தக்கறை படிந்த மண்ணை எடுத்துச் சென்றனர்

4. இறந்த சம்பவம் நடந்த அன்று காவலர்கள் லூதியானாவில் உள்ள மாவட்ட மருத்துவமனைக்கு(DMC) சென்று இறப்பாய்வு அறிக்கை தயார் செய்தனர். குற்றம் இதச பிரிவு 302 ன் கீழ் உயர்த்தப்பட்டு இறந்தவரின் உடலை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். பிரேத பரிசோதனை அறிக்கையில் எட்டு இடங்களில் காயங்கள் இருந்ததாக கண்டறியப்பட்டு, தலையில் பலத்த அடி ஏற்பட்டு அதிர்ச்சியினாலும், இரத்த பெருக்கினாலும் மரணம் ஏற்பட்டதாக மருத்துவர் தெரிவித்தார்.

5. மேல் முறையிட்டாளர் 09-08-1998 அன்று கைது செய்யப்பட்டார். அரசு தரப்பின்படி, குற்றவாளியின் வீட்டில் உள்ள கோதுமை கிடங்கில் உள்ள அறையில் 'பஹி' கருவியை மறைத்து வைத்ததாக குற்றவாளி ஒப்புக் கொண்டுள்ளார். மேல்முறையீட்டாளர் தெரிவித்த இடத்தில் இருந்து இரத்தக்கறை படிந்த பஹி கருவியை தலைமைக் காவலர் குர்தாஸ் சிங் மற்றும் சரண்ஜித் சிங் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. காவலர்கள் இரத்தம் படிந்த மண்ணையும், ரத்தம் படியாத மண் மற்றும் பஹி கருவியை வேதியல் சோதனைக்கு அனுப்பி வைத்தனர். வேதியல் பகுப்பாய்வாளர் அறிக்கையின்படி பஹி கருவியில் உள்ள இரத்தக்கறை மற்றும் சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட இரத்தம் தோய்ந்த மண் இரண்டும் இறந்தவரின் உடலில் உள்ள ரத்தம் தான் என்று கண்டறியப்பட்டது.

6.குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 207 ன் கீழ் நடைமுறைகள் முடிவுற்றபின், வழக்கு 13- 10-1998 அன்று அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு 17-11-1998 அன்று குற்றம் சாட்டப்பட்டவர் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 302 ன் கீழ் குற்றம் சுமர்த்தப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர் தான் நிரபராதி என்றும் விசாரணை நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

7. அரசு தரப்பில் எட்டு சாட்சிகள் அரசு தரப்பு சாட்சி 1 முதல் 8 வரை விசாரிக்கப்பட்டு மேலும் ஆவண சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சியம் பதிவு செய்யப்பட்ட பின், குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 313 ன் கீழ் விசாரிக்கப்பட்டு அவர் மீது குற்றத்திற்குட்படுத்துதலுக்கான அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டன. அவர் தன் மீது சுமத்தப்பட்ட அனைத்து சாட்டுரைகளையும் மறுத்தார் மற்றும் தான் நிரபராதி என்று சாதித்தார். அவர் சம்பவம் நடந்த முந்தைய நாள் தனக்கும் இறந்தவருக்கும் ஏற்பட்ட மோதலின் காரணங்களை வைத்து தன்னை இந்த வழக்கில் குற்றவாளி ஆக்கியதாக வாதிட்டார். இறந்தவர்

இருசக்கர வாகனத்தில் ஏற்பட்ட விபத்தால் காயமடைந்ததாக அவர் தெரிவித்தார். இருப்பினும் குற்றம் சாட்டப்பட்டவர் அந்த கூற்றுக்கான எந்த ஒரு சான்றையும் சமர்ப்பிக்கவில்லை.

விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு

8. கற்றறிந்த கூடுதல் நீதிமன்ற அமர்வு நீதிபதி திரு.முச்ட்சார் 13-07-2001 தேதியிட்ட தீர்ப்புரையில் கீழ்கண்ட முடிவுகளின் படி மேல்முறையீட்டாளரை குற்றத்திலிருந்து விடுவித்தார்

i)முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய 4.5 மணி நேரம் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. 03-08-1998 அன்று குற்றம் சாட்டப்பட்டவர் மிக தாமதமாக கைது செய்யப்பட்டதை பார்க்கும்போது அரசு தரப்பிற்கு சம்பவம் நடப்பதற்கு உண்மையான பின்னணி என்ன என்பதை நிச்சயமாக கூற இயலவில்லை.

ii)சம்பவம் நடப்பதற் நிச்சயமான நோக்கம் இல்லை மற்றும் அரசு தரப்பு அதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கத் தவறிவிட்டது.

iii) விசாரணை அதிகாரியான துணை உதவி ஆய்வாளர் ஜர்னநல் சிங் மற்றும் சுக்ராஜ் சிங்(குற்றமுறையீடு செய்தவர்) இருவரும் ஒருவருக்கொருவர் ஏற்கனவே அறிமுகம் ஆனவர்கள் ஆவர்.

iv) குற்றம் நடந்ததாக சொல்லப்பட்ட நேரம் தெளிவாக சொல்லப்படவில்லை

v) சாட்சி சான்றுரைஞர்களான சுக்ராஜ் சிங் மற்றும் சரண்ஜித்சிங் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் இல்லை

vi) மேலும் சம்பவத்தை நேரில் கண்ட தேஜா சிங் மனோகர் சிங் மற்றும் தார்பாரா சிங் ஆகியோரை அரசு தரப்பு விசாரிக்கவில்லை

vii) மருத்துவ சான்றானது கண்கூடான சாட்சியத்திற்கு முரண்பாடாக உள்ளது. லூதியானா மாவட்ட மருத்துவமனையின் மருத்துவக் குறிப்பில்(பெட் ஹெட் டிக்கெட்) உள்ள வழக்கு குறிப்பு கண்கூடான கூற்றுக்கு எதிர்மாறாக உள்ளது

viii) சம்பவ இடத்தின் மாதிரி வரைபடமும் அளக்கப்பட்ட வரைபடமும் முத்துப் போகவில்லை.

ix) இந்த குற்ற விடுதலையை ஏற்றுக் கொள்ள முடியாத பஞ்சாப் மாநில அரசும் குற்றம் முறையீட்டாளரும் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு மற்றும் சீராய்வு மனுக்களை தொடர்ந்துள்ளனர்

<u>உயர்நீதிமன்ற தீர்ப்புரை</u>

10) உயர் நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அளித்த குற்றவிடுதலையை நிராகரித்தது மற்றும் விசாரணை நீதிமன்றம் சான்றுகளை தவறாக புரிந்து கொண்டுள்ளதாக புரிதலை தெரிவித்தது. உயர்நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவருக்கு இ த ச பிரிவு302 ன் படி தண்டனை வழங்கியதற்கு கீழ்கண்ட காரணங்களை பதிவு செய்தது

i) முதல் தகவல் அறிக்கை தாமதமாக பதிவு செய்யப்பட்ட ஒரே காரணத்தினால் அரசு தரப்பு வழக்கு நிராகரிக்க முடியாது. மகான் சிங் மிகவும் ஆபத்தான நிலையில் தலையில் அடிபட்டு ரத்தம் வழிந்து கொண்டு இருந்ததால், குற்றமுறையீடு செய்தவர் தன் தந்தையின் உயிரை காப்பாற்ற வேண்டும் என்பதுதான் அவருடைய முதல் முன்னுரிமையாக இருந்தது.

ii) துணை உதவி ஆய்வாளர் ஜர்னநல் சிங் குற்ற முறையீடு செய்தவருக்கு ஏற்கனவே அறிமுகமானவர் என்ற கூற்று பொருளற்றது. குற்ற முறையீடு செய்தவருக்கு காவலர்களிடம் சம்பவத்தை தெரிவிக்க உரிமை உண்டு. துணை உதவியாளர் குற்றம் முறையீடு செய்தவருக்கு சாதகமாக நடந்து கொண்டார் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

iii)சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் பகல் நேரத்தில் தான் சம்பவம் நடந்தது என்று பதிவு செய்தது மருத்துவர் காவல் நிலையத்திற்கு காலை 11.15 மணிக்கு தெரிவித்ததன் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.சம்பவம் நடந்த நேரத்தை நம்பாமல் இருப்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

iV) பிண ஆய்வு அறிக்கையின்படி இறந்தவருக்கு எட்டு காலங்கள் ஏற்பட்டுள்ளன. அரசு தரப்பு சாட்சி அச 2(pw2) மருத்துவர்அமன் கபூர் கூற்றுப்படி தலையில் தான் பிரதானமான காயம் ஏற்பட்டதாகவும் மற்ற காயங்கள் இறந்தவர் கீழே விழுந்ததினால் ஏற்பட்டிருக்கலாம் என்ற கருத்து தெரிவித்திருக்கிறார். இந்த காயங்கள் வீக்கத்தினாலும் சதை சிதைவினாலும் ஏற்பட்டவை

v) இறந்தவர் லூதியானா மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நேரத்தில், இறந்தவர் இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது யாரோ ஒருவரால் தலையில் அடிக்கப்பட்டு பலத்த காயங்கள் ஏற்பட்டதாக பதிவு செய்திருப்பதை விசாரணை நீதிமன்றம் தேவையற்ற முக்கியத்துவம் கொடுத்துள்ளது. மகன் தன் தந்தையை மிக ஆபத்தான நிலையில் லூதியானா மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு வந்த போது மிகவும் அதிர்ச்சியுற்ற மனநிலையில் இருந்ததால் சம்பவத்தை பதிவு செய்ததில் சிறு தவறுகள் நேர்ந்திருக்கலாம். அது இந்த வழக்கின் உயர் தகுதியை எந்த வகையிலும் பாதிக்காது.

vi) சம்பவம் நடந்த இடத்தில் மனைத் திட்டம் தயாரிக்கப்பட்ட சமயத்தில் அக்கம் பக்கம் எந்த கட்டிடங்களும் கட்டப்படவில்லை என்பதை வைத்து விசாரணை அதிகாரி தயாரித்த வரைபடம் சரியானது அல்ல என்று கூற முடியாது. விசாரணை அதிகாரி தயாரித்த மாதிரி வரைபடத்தில் சில சிறிய தகவல்கள் விடுபட்டுள்ளன என்பதை வைத்து அளக்கப்பட்ட வரைபடம் முன்னுக்கு பின் முரணானவை என்று கொள்ள முடியாது

vii) குற்றம் சாட்டப்பட்டவர் 03-08-1998 அன்று தான் கைது செய்யப்பட்டார் என்பதை வைத்து அரசு தரப்பு வழக்கு நம்பத் தகுந்ததல்ல என்று கூற எந்த காரணமும் இல்லை. குற்றம்சாட்டப்பட்டவர் தான் எப்படியும் கைது செய்யப்படுவோம் என்று பயந்து ஓடி இருக்கலாம்

viii) இரு தரப்பினரும் சொந்தக்காரர்கள். வாய் தகராறு நடந்ததை மட்டுமே வைத்து குற்ற முறையீட்டாளர் எதிர் முறையீட்டாளர் மீது பழி சுமத்தி உள்ளார் என்று

சொல்வதற்கான காரணங்கள் இல்லை. ஏனென்றால் மேல்முறையீட்டாளர் இறந்தவரின் மருமகன் ஆவார். குற்றவாளி ஒருவர் மட்டுமே. அவர் ஒரே ஒரு காயத்தை ஏற்படுத்தி உள்ளார். ஆகையால் அவர் மீது பொய்யாக பழி சுமத்தப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள இயலாது. பஹி என்ற அந்த கருவி மேல்முறையீட்டாளர் காட்டிய இடத்திலிருந்து தான் மீட்கப்பட்டுள்ளது.

ix) மேல் முறையிட்டாளரின் குடும்ப சொந்தக்காரர்கள் அல்லது அந்த கிராமத்தில் வசிக்கும் அந்நியர்களோ மேல் முறையீட்டாளரின் தற்காப்பு கூற்றை ஆதரிக்க முன்வரவில்லை ஏனென்றால் அவர்கள் மேல்முறையீட்டாளர் தான் இறந்தவர் இறப்புக்கு காரணம் என்பதை நன்கு அறிந்திருந்தார்கள்

x)கண்கூடான சாட்சியங்கள் உண்மையானவை மற்றும் நம்பத் தகுந்தவை ஏனென்றால் மருத்துவ சான்றுகள் அதை பறைசாற்றுகின்றன.

xi) மேல்முறையீட்டாளருக்கு இதச பிரிவு 300 உட்பிரிவு 4 ன் கீ விலக்கு அளிக்க தகுதியற்றவர் ஆகிறார் ஏனென்றால் சம்பவம் திடீரென்று நடக்கவில்லை மற்றும் ஏற்கனவே திட்டமிட்டு நடந்துள்ளது. மேல்முறையீட்டாளர் சம்பவ இடத்துக்கு முந்தைய நாள் நடந்த வாய் தகராறினால் இறந்தவரின் மீது மிகுந்த வெறிகொண்டு பஹி என்ற மரக்கட்டையினால் ஆன கட்டிலின் ஒரு காலைக் கொண்டு வந்து வயது முதிர்ந்த மற்றும் ஒல்லியான தேகம் கொண்ட ஒருவர் தலையில் ஆக்ரோஷத்துடன் தாக்கியுள்ளார். அதன் விளைவாக அடிபட்டவர் மண்டையோடு சிதைந்து மறுநாள் அவர் இறக்க நேர்ந்தது.

11) உயர் நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பினால் பாதிக்கப்பட்டு மேல்முறையீட்டாளர் இந்த நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார்

பகுப்பாய்வு

அரசு தரப்பு இறந்தவரின் இறப்பு மனிதக் கொலை என்பதை நிரூபித்துள்ளது. பிரேத பரிசோதனை அறிக்கையின்படி இறந்தருக்கு எட்டு காயங்கள் உள்ளன மருத்துவர் அமன்

கபூர் (அரசு தரப்பு சாட்சி 2) தன்னுடைய அறிக்கையில் தலையில் தான் முக்கிய காயம் ஏற்பட்டு உள்ளதாக கூறி உள்ளார். சாட்சி சான்றுரைஞர்கள் சுக்ராஜ் சிங் (அ.ச.3) மற்றும் சரண்ஜித் சிங் (அ.ச.4) இருவரும் மேல்முறையீட்டாளர் தங்களுடைய தந்தையை பவிரி என்ற கருவியால் தலையில் தாக்கியதாக கூறுகின்றனர். இறந்தவருக்கு இறப்பை ஏற்படுத்திய பஷி என்ற கருவி மேல்முறையீட்டாளர் அதை மறைத்து வைத்த இடத்தை ஒப்புக்கொணட் பிறகு காவலர்களால் கைப்பற்றப்பட்டது.

13. அரசு தரப்பு சந்தேகத்துக்கு இடமின்றி குற்ற நிகழ்வை அவர்கள் கூறியபடி நிருபித்தள்ளனர் என்பதை நாங்கள் நம்புகிறோம். இறந்தவர் குற்றம் சாட்டப்பட்டவர் எற்படுத்திய காயத்தினால் இறந்துவிட்டார். நாங்கள் தற்பொழுது கருத்தில் கொள்ள வேண்டிய ஒரே கேள்வி என்னவென்றால் இந்த வழக்கு உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி குற்றமுற்றவர் கொலைக்கு நிகராகம் குற்றமுறு மனிதக் கொலை செய்ததினால் இந்திய தண்டனை சட்டம் பிரிவு 302 ன் கீழ் தண்டனை பெறக்கூடியவரா அல்லது அதற்கு மாறாக மேல்முறையீட்டாளரின் வாக்குரைஞர் வாதத்தின் படி குற்றமுற்றவர் கொலைக்கு நிகராகாத குற்றமுறு மனிதக் கொலை செய்ததினால் இந்திய தண்டனை சட்டம் பிரிவு 304 ன் கீழ் தண்டனை பெற தகுதி உள்ளவரா என்பதாகும்.

14. இந்த நீதிமன்றம் அளித்த முந்தைய திர்ப்புகளை கருத்தில் கொண்டு சமீபத்தில் முகமது ரபீக் எதிர் மத்திய பிரதேச மாநிலம் (2021, 10 எஸ்.சி.சி.706) என்ற வழக்கில் குற்றமுற்றவர் கொலைக்கு நிகரான குற்றமுறு மனிதக் கொலை செய்தாரா அல்லது கொலைக்கு நிகராகாத குற்றமுறு மனிதக் கொலையை செய்தாரா என்ற துல்லியமான வித்தியாசத்தை தெளிவுபடத்தி தீர்ப்பு அளித்துள்ளது. இந்த இரண்டு குற்றங்களிலும் உள்நோக்கம் மற்றும் அறிவு சார்ந்த செய்கைகள் சிறு வேறுபாட்டுடன் உள்ளமையால் குற்றத்திற்கான தண்டனை இ.த.ச பிரிவு 302 ன் கீழ் அளிக்க வேண்டுமா அல்லது பிரிவு 304 ன் கீழ் அளிக்க வேண்டுமா என்ற சந்தேகத்தை இந்த

நீதிமன்றம் தெளிவுபடுத்துவது கடினமாகிறது. தீர்ப்பின் சம்பந்தப்பட்ட பகுதிகளை கீழே விவரித்துள்ளோம்.

"பத்தி-11 -

இந்திய தண்டனை சட்டம் (இ.த.ச.) வடிவமைக்கப்பட்டு ஒன்றரை நூற்றாண்டகளாக நமத நாட்டில் உள்ள நீதிமன்றங்களின் கவனத்தை ஈர்த்தள்ள கேள்வி என்னவென்றால் தொடரப்பட்ட ஒரு வழக்கில் மனிதக் கொலை ஏற்பட்டதை பிரிவு 302 ன் கீழ் தண்டனை பெற்க் கூடியதா அல்லது குற்றமுறு மனிதக் கொலை ஏற்பட்டதை பிரிவு 304-ன் கீழ் தண்டனை பெறக் கூடியதா என்பதாகும். இநத் நீதிமன்றத்தில் இம்மாதிரியான செயலுக்கு பல நூற்றுக்கணக்கான தீர்ப்புகள் தீர்ப்பு வழிச் சட்டங்களை மேற்கோள் காட்டி அளிக்கப்பட்டுள்ளன. பல நேரங்களில் கற்றம் சாட்டப்பட்டவர் கொலை நோக்கத்துடன் இரந்ததற்கு "வாய்ப்பு" இருக்கிறத என்ற சொல்லை பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில் குற்றமுறு மனிதக் கொலை செய்தாரா என்ற உறுதியற்றத் தன்மை நிலவுகிறது. இருப்பினும் "கொலை" என்ற சொல்லை விவரிக்கும் இ.த.ச பிரிவு 300 "வாய்ப்பு" என்ற சொல்லை பயன்படுத்தவில்லை ஏனென்றால் குற்றம் சாட்டப்பட்டவர் மீது தெளிவின்மை இல்லாததை வெளிப்படுத்துகிறது. குற்றம் சாட்டப்பட்டவரக்கு அவர் செயல் கொலையில் தான் முடியும் என்று நிச்சயமாக தெரியும். பல சந்தர்ப்பங்களில் குற்றமுறு மனிதக் கொலை மற்றும் கொலை என்ற பாகுபாட்டை விவரிக்க முடியாது ஏனென்றால் இரண்டு செயல்களும் இறப்பை ஏற்படுத்துகின்றன. இருப்பினும், இரண்டு குற்றங்களிலும் உள்நோக்கம் மற்றும் அறிவியல் நுட்பமான வேறுபாடு உள்ளது. இந்த வித்தியாசம் செய்த செயலின் அளவில் தான் உள்ளது. இந்த இரண்டு கொலைகளிலும் உள்நோக்கம் மற்றும் நுண்ணறிவு பெரிய அளவில் வேறுபாடு உள்ளது.

பத்தி-12-

ஆந்திர மாநில அரசு எதிர் ராயவரப்பு பன்னையா மற்றும் ஒருவர் என்ற வழக்கில் அறித்த தீர்ப்பு இற்த இரண்டில் உள்ள துல்லிய மற்றும் முக்கியமான வித்தியாசத்தை தெளிவு படுத்தி உள்ளது. நீதிமன்றம் கீழ்கண்டவாறு வலியுறுத்தி உள்ளது.

12. தண்டனை சட்டத்தின் வரைமுறைப்படி "குற்றமறு மனிதக் கொலை" என்பத உட்கரு மற்றும் "கொலை" என்பது அதன் இனம். எல்லாக் கொலைகளும் குற்றமுறு மனிதக் கொலைகள் ஆனால் எல்லா குற்றமுறு மனிதக் கொலைகளும் கொலைகள் ஆகாது பொதுவாக சொன்னால் கொலைக்கான சிறப்பு பண்புக்கூறுகள் இல்லை என்றால் அது குற்றமுறு மனிதக் கொலையாக கருத முடியாது. தண்டனையை நிர்ணயிப்பதில், குற்றத்தின் ஆாத்தின் விகிதாச்சாரப்படி, தண்டனை சட்டம் மூன்று விதமான குற்றமுறு மனிதக் கொலைகளை கண்ட அறிந்தள்ளது. ஒன்றாவது முதல் தர குற்றமுறு மனிதக் கொலை என்று கூறலாம். இதைத் தான் பிரிவு 300 குற்முறு மனிதக் கொலையின் அதிகபட்சமான செயலினால் ஏற்படும் கொலை என்று வரையறுத்துள்ளது. இரண்டாவத, இரண்டாம் தர குற்றமுறு மனிதக் கொலை என்பதாகும். இதற்கு பிரிவு 304 முதல் பகுதியின் கீர் தண்டனை வழங்கப்படும். அடுத்ததாக, குற்றமுறு மனிதக் கொலையின் மூன்றாம் தரம். இதுதான் குற்றமுறு மனிதக் கொலையின் மிகவும் சாதாரண கொலைக் குற்றமாகும். இதற்கு மூன்று தரங்களிலேயே மிகவும் குறைவான தண்டனை வழங்கப்படும். இந்த செயலுக்கு பிரிவு 304 பாகம் 2 ன் கீழ் தண்டனை வழங்கப்படும்.

13. கொலைக்கும் குற்றமுறு மனிதக் கொலைக்கும் உள்ள செயல்முறை சாராத வித்தியாசம் பல நூாற்றாண்டுகளாக நீதிமன்றங்கள் உண்மையான நோக்கு எல்லையையும் சட்டமன்றம் இப்பிரிவுகளில் உபயோகப்படுத்தும் வார்த்தைகளின் அர்த்தத்தையும் கூடாது நோக்காவிடில் அவைகள் குழப்பம் ஏற்பட்டு தங்களுடைய முடிவுகளை சுருக்கிக் கொள்கின்றன. இந்த

வகையான சட்ட நிபந்தனை வாசகங்களுக்கு பொருள் விளக்கம் அளிக்கும் போது நாம் பிரிவு 299 மற்றும் 300 கூறுகளில் உபயோகப்படத்தப்பட்டுள்ள முக்கிய வார்த்தைகளை பயன்படுத்துவதே பாகாப்பான முறை ஆகும்.

பத்தி-13

நீதிமன்றங்கள் ஒரு கொலை குற்றச்செயல் கொலைக்கு நிகரான தண்டனைக்கு உட்பட்டதா அல்லது கொலைக்கு நிகராகாத குற்றமுறு மனிதக் கொலைக்கு உட்பட்டதா என்று எவ்வாறு நிர்ணயிக்க வேண்டும் என்பதை ஆந்திர பிரதேச மாநிலம் மற்றும் புளிசெர்லா நாகராஜீ என்ற நாகராஜ ரெட்டி தீர்ப்பின் மூலம் தெளிவுபடுத்தி உள்ளது. இந்த நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பில் பதிவு செய்தள்ளது:

" 29. ஆகையால் நிதிமன்றங்கள் மிகவும் கவனத்தடனும் எச்சரிக்கையுடனும் நடந்த நிகழ்வில் உள்நோக்கம் இருந்ததா என்ற நுட்பமான கேள்வியை கருத்தில் கொண்டு முடிவு எடுக்க வேண்டும் ஏனென்றால் அதை வைத்து தான் குறிப்பிட்ட வழக்கில் தண்டனை பிரிவு 302 அல்லது பிரிவு 304 பகுதி - I அல்லது பிரிவு 304 பகுதி - II ன் கீழ் வழங்க வேண்டுமா என்ற முடிபுக்கு வரமுடியும். மிகச் சிறிய மற்றும் கால்நடைகளை திருடுதல், குழந்தைகளுக்குள் சண்டை, கோபத்தை ஏற்படுத்தும் வார்த்தைகளை பயன்படுத்ததல், தவறான பார்வை இவை அனைத்தும் வாய்த்தகராறு மற்றும் கூட்டங்களுக்குள் மோதல் எற்பட்டு இறப்பு எற்பட வாய்ப்புண்டு. இந்த சந்தர்பங்களில் பழிவாங்கும் உணர்ச்சி, பேராசை பொறாமை, அல்லத சந்தேகம் ஆகியவை இருக்காது. உள்நோக்கமும் இருக்காது. முன் விரோதமும் இருக்காது. சொல்லப்போனால் குற்றம் செய்யும் எண்ணமே இருக்காது. மறுபக்கத்தை நோக்கினால், நில கொலை வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர் கொலைக்கு உண்டான தண்டனையை தவிர்ப்பதற்காக தனக்கு இறப்பை ஏற்படுத்தம் உள்நோக்கம் இல்லை என்ற கதையை கூற முயல்வார். நீதிமன்றங்கள் தான் குறிப்பிட்ட கொலை வழக்குகள் பிரிவு 302 ன் கீழ் தண்டனை பெறக் கூடியதை பிரிவு 304 பகுதி I/II ன் கீர் மாற்றப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்

அல்லது கொலைக்கு நிகராகாத குற்றமுறு மனிதக் கொலைகள் கொலைகளாக கருதப்பட்டு பிரிவு 302 ன் கீழ் தண்டனை வழங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இறப்பை ஏற்படுத்தும் உள்நோக்கம் இருநத்தா என்பதை கீழ்கண்ட சந்தர்ப்பங்களில் கூட்டாகவும் தனித்தனியாகவும் பிரித்து அறிந்து கொள்ளலாம்.

1. உபயோகப்படுத்தப்பட்ட கருவியின் தன்மை.
2. அந்த கருவி குற்றம் சாட்டப்பட்டவர் கையில் கொண்டு சென்றாரா அல்லது சம்பவ இடத்தில் இருந்து எடுத்தாரா?
3. உடலின் முக்கிய பாகத்தில் குறிவைத்து அடித்தாரா?
4. காயம் ஏற்படுவதற்கு முழு பலத்தையும் பயன்படுத்தினாரா?
5. அவர் செய்த செயல் தற்செயலாக நடந்த வாய்த்தகராறினால் ஏற்பட்டதா அல்லது திடீர் சண்டை மற்றும் கூட்டுச் சண்டையினால் ஏற்பட்டதா?
6. அந்த நிகழ்வு தற்செயலாக நிகழ்ந்ததா அல்லது முன் ஏற்பாடுடன் நிகழ்ந்ததா?
7. ஏற்கனவே முன்விரோதம் இருந்ததா அல்லது இறந்தவர் அந்நியரா?
8. திடீர் தூண்டுதலால் மற்றும் அபாயகரமான நிலையில் செய்தாரா அப்படி என்றால் அதற்கான காரணங்கள் என்ன?
9. அதிக எரிச்சல் அடைந்து அந்த சம்பவத்தை செய்தாரா?
10. காயத்தை எற்படுத்தியவர் சந்தர்பப்தை பயன்படுத்தி மிக கொடுரமான மற்றும் அசாதாரண செயலை செய்தாரா?
11. குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு அடி அடித்தாரா அல்லது தொடர்ந்து பல அடிகள் அடித்தாரா?

மேற்கூறிய சந்தர்ப்பங்கள் யாவும் முடிவற்றவை மற்றும் சந்தர்ப்பங்களின் வரிசை இன்னும் நீண்டு கொண்டே போகும். இன்னும் சில அரிய சந்தர்ப்பங்கள் நமக்கு அந்த நிகழ்வில் உள்நோக்கம் இருந்ததா என்பதை தெளிவு படுத்தும்.

15) குற்றவியல் நீதி முறையில் உள்நோக்கம் என்பது முக்கிய பங்கு வகிக்கிறது. அரசு தரப்பு குற்றவாளி குற்றம் செய்ததற்கு உள்நோக்கம் இருந்தது என்பதை நிரூபிக்கத் தவறினால் அது குற்றம் செய்ததாகாது. உள்நோக்கம் மட்டுமே ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் கொலைக்கு நிகராகும் குற்றமுறு மனிதக் கொலை செய்தாரா என்ற முடிவு எடுக்க உதவ முடியும். உள்நோக்கத்துடன் சேர்ந்து, நுண்ணறிவு மற்றும் குற்றத்தின் அளவு ஆகியவைகளும் இறந்தவர் எவ்வாறு கொல்லப்பட்டார் என்பதை முடிவு செய்ய உதவும்.

16)இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு தன்னுடைய மாமனை கொல்ல வேண்டும் என்ற உள் நோக்கம் இல்லை. எந்த ஒரு உள்நோக்கமும் இல்லை என்பதை அவர் செய்த செயல்கள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். அவர் சம்பவம் நடப்பதற்கு முந்தைய நாள் தன்னுடைய மாமன் அவரை திட்டியதால் மிகுந்த கோபத்திற்கு ஆளானார். அதன் விளைவாக அவரை கொலை செய்ய தூண்டியது. மேல்முறையீட்டாளர் தன்னுடைய கையில் மரத்தினால் ஆன கட்டில் கால் கட்டையை வைத்திருந்ததை பயங்கர ஆயுதமாக கருத முடியாது. அவர் அந்த கட்டையால் தன் சொந்த மாமனை ஒரே ஒரு அடி தலையில் அடித்ததினால் மாமன் மரணம் உற்றார் என்பதை அவருக்கு கொலை செய்யும் உள்நோக்கம் இருந்தது என்று எடுத்துக் கொள்ள முடியாது. அவர் முந்தைய நாள் தனக்கு நேர்ந்த அவமானத்திற்கு தன்னுடைய மாமனுக்கு பாடம் புகட்ட வேண்டும் என்று நினைத்திருக்கலாம். மேலும் மேல்முறையீட்டாளருக்கு ஒரே ஒரு அடியினால் தன் மாமன் இறந்து விடுவார் என்ற நுண்ணறிவு அவருக்கு இருந்தது என்று நான் கருத முடியாது.

17) ஆகையால் நாங்கள் மேல்முறையீட்டாளர் பிரிவு 302 ன் கீழ் தண்டிக்கப்பட கூடியவர் என்று கருதவில்ன். ஆனால் அவர் இதச பிரிவு 304 உட்பிரிவு II ன் கீழ் தண்டனை பெறக்கூடியவர் ஆகிறார்.

18) மேல்முறையீட்டாளர் 09-08-1998 அன்று கைது செய்யப்பட்டு விசாரண நீதிமன்றத்தால் குற்றமற்றவர் என்று உறுதி செய்யப்பட்டு, 13-07-2001 விடுதலை செய்யப்பட்டார். அவர் மறுபடியும் 04-10-2014 அன்று உயர் நீதிமன்றத்தால் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டதனால் சரணடைந்தார். அவர் ஏற்கனவே எட்டு ஆண்டுகள் சிறை தண்டனையை அனுபவித்துள்ளார். ஆகவே அவருடைய ஆயுட்கால தண்டனை குறைக்கப்பட்டு ஏற்கனவே அவர் சிறையில் இருந்த நாட்களே அவருக்கு தண்டனையாக கொள்ளப்படுகிறது. உயர் நீதிமன்றம் வழங்கிய அபராதம் அப்படியே ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

19) ஆகையால், இந்த மேல்முறையீடுகளின் சில பகுதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு கீழ்கண்டவாறு மாற்றி அமைக்கப்படுகிறது.

1) இதச பிரிவு 302 ன் கீழ் வழங்கப்பட்ட தண்டனை ரத்து செய்யப்படுகிறது

2) மேல்முறையீட்டாளருக்கு இதச பிரிவு 304 பகுதி II ன் கீழ் தண்டனை வழங்கப்படுகிறது

3) சிறையில் அனுபவித்த நாட்களை தண்டனையாக வழங்கப்படுகிறது. அதனுடன் உயர் நீதிமன்றம் விதித்த அபராரத்தை உறுதி செய்யப்படுகிறது.

4) மேல்முறையீட்டாளர் வேறு எந்த குற்ற வழக்கிலும் தேடப்படுபவர் அல்ல என்றால் அவரை உடனடியாக விடுதலை செய்யலாம்.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும்,செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "